Sham.

## சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

## பரிசளிப்பு விழாவும்

# தாபகர் தின விழாவும்

# 1987

பிரதம விருந்தினர்:

**ஜனாப் M. M. மன்சூர் அவர்கள்**

*(கல்விப்பணிப்பாளர், யாழ் மாவட்டம்)*

தாபகர் ஞாபகப் பேருரை:

**பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்**

*(கல்விப்புலம், யாழ் பல்கலைக் கழகம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ நிகழ்ச்சி நிரல் ★

1. தேவாரம்

2. அதிபர் அறிக்கை

3. தாபகர் தின ஞாபகப் பேருரை:

   **பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்**

4. பரிசு வழங்கல்

5. பரிசளிப்புப் பேருரை:

   **ஜனாப் M. M. மன்சூர் அவர்கள்**

6. நன்றியுரை: செல்வன் க. சிவபாலன் அவர்கள்

7. கலை நிகழ்ச்சிகள்

   1) குழுநடனம் 2) ACTION SONG 3) நடனம் 4) சிறுநாடகம்

8. கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் அறிக்கை,

ஜனாப். M. M. மன்சூர் அவர்களே
பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களே
பெரியோர்களே!

எமது வருடாந்தப் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் நாம் இதயபூர்வமாக வருக! வருக! என வரவேற்கின்றோம். எங்கள் அழைப்பு குறுகிய கால அழைப்பாக இருந்தாலும், நீங்கள் அதனை ஏற்று ஆர்வத்துடன் வந்திருப்பதைக் கண்டு நாம் பேருவகை கொள்கின்றோம்.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகிய ஜனாப் மன்சூர் அவர்களே! இந்த விழாவில் தங்களை எங்கள் பிரதம விருந்தினராகப் பெற்றிருப்பதை நாம் பெரும்பேறாகவே கருதுகின்றோம். கல்வி வளர்ச்சியில் தாங்கள் ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரி, பிரதம கல்வி அதிகாரி நிலைகளில் சேவை செய்து, நிரம்பிய அனுபவம் பெற்று இன்று யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் பதவியை அலங்கரிக்கிறீர்கள். உங்கள் பரிபாலனத் திறனை அறிந்த மேலதிகாரிகள் உங்களுக்குக் கல்விப் பரிபாலன சேவையில் முதலாம் வகுப்பிற்குப் பதவி உயர்வு கொடுத்ததில் எவ்வித வியப்புமில்லை. மாற்றங்கள் பல நடந்து கொண்டு இருக்கின்ற இக்காலத்தில், ஆற்றலும் அனுபவமும் நிரம்பிய நீங்கள் எங்கள் மாவட்டத்துக்கு பணிப்பாளராய் இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். எதனையும் ஆராய்ந்து காய்தல், உவத்தல் இன்றி நடுநிலைமை நின்று செயலாற்றுகின்ற நீங்கள், இந்த மாற்றங்களை எல்லோரும் ஏற்கக் கூடிய வகையில் நிறைவேற்றுவீர்கள் என்பது நிச்சயம். எனவே பரிசளிப்பு விழாவிற்குத் தங்களை அழைத்துச் சிறப்புறச் செய்து, அவர்களும் வாழ்க்கையின் பின்பற்றக் கூடிய முன் மாதிரியாக எமது மாணவர்களுக்குத் தங்களை அறிமுகஞ் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

யாழ் பல்கலைக் கழகத்தில் கல்விப் பேராசிரியராய் கற்றோர்க்குப் பெருந்துணையாய், அறிவுக்கு இருப்பிடமாய் யாவரையும் கவரும் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள், தங்களிடம் ஆழ்ந்து அகன்ற பரந்த கல்வி அறிவைப் பெற்றவர் அநேகர். பாடசாலையிலும், பல்கலைக் கழகங்களிலும் தாங்கள் உருவாக்கிய கல்விமான்கள் அநேகர். "கல்வியின் நோக்கம் கல்விக் கொள்கைகள்" என்று தாங்கள் பேசிப் பரப்பிய தத்துவங்களைக் கேட்டோர் அநேகர். தாங்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றைப் படித்து பயன் பெற்றவர்கள் அநேகர். கிழக்கு மாகாணத்தில் கல்விச் சுடரை ஒளிரச் செய்த சுவாமி விபுலானந்தரின் முதல் ஆ[illegible] பத்தக்குட்டி உபாத்தியாரின் மகனாகிய தாங்கள், கல்விக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளீர்கள். தங்களை வரவேற்பதில் நாம் பேருவகையும் பெருமதிப்பும் அடைகிறோம்.

## கல்வித்துறையில் மாற்றங்கள்:

இன்றைக்கு எழுந்துள்ள பிரச்சனைகள் மத்தியிலும் எங்கள் கல்விக் கூடங்களில் கற்பித்தல் ஒழுங்காக நடைபெறுகின்றது. பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமைகின்றன. இதற்காகக் கல்வித்துறையில் அக்கறையுள்ள எல்லோருக்கும் நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மாணவர் மத்தியில் ஓர் அதிருப்தி, ஏக்கம் இருப்பதை நாங்கள் கவனியாது இருக்க முடியாது. இன்றைக்கு நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகள் இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்தப் பிரச்சனைகள் விரைவில் தீருவது அவசியம். ஆனால் கல்வியில் ஈடுபட்ட நாங்கள் இன்னும் 10 வருட காலத்தில் உருவாகும் சமுதாயத்திலேயே அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். அந்தச் சமுதாயத்திற்கு வேண்டிய பிரஜைகளை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இனி வருகிற சமுதாயத்திலே சர்வசாதாரண வாழ்க்கை நடாத்தத் தொழில் நுட்ப அறிவு இன்றியமையாததாகும். இயந்திரங்கள், உபகரணங்கள் கணனிகள் போன்றவற்றுடனும் நாங்கள் அதிகமாகப் பழக வேண்டி இருக்கும். சாதாரண மனிதனுக்கும் இயந்திரங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனைத் திருத்தக்கூடிய தொழில் நுட்ப அறிவு இருக்க வேண்டும் ஆகவே 10 வருடங்களுக்குப் பின்பு வேண்டிய தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கு வேண்டிய திறன்களை மாணவர்க்கு இன்றே பயிற்றுதல் வேண்டும்.

அதே நேரத்தில் புதிய சமுதாயத்தில் ஒருவர் தனித்து வாழ முடியாத நிலை ஏற்படும். மற்றவர்களுடன் சேர்ந்தே வாழலாம். சமுதாயப் பிணைப்புக் கூடுதலாக இருக்கும் ஆகவே மாணவர்களுக்குச் சமுதாயத் திறன்களைக் கற்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தொழில் நுட்பத்தில் கூடிய வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்விமான்கள் இதனையே இன்று வற்புறுத்துகிறார்கள். அதாவது ஒன்று சேர்ந்து திட்டமிடல், தீர்மானம் எடுத்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல், ஒருவர் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறல் போன்ற சமுதாயத் திறன்களைப் பயிற்றுவிக்க மாணவர்களுக்கு வேண்டிய அனுபவங்களைக் கொடுக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் பண்பாட்டுக்குரிய சிறந்த விழுமியங்களைப் புதிய சமுதாயத்தினருக்குப் புகட்ட வேண்டும். சமய போதனைகள் உதாரணம் மூலம் இதைச் செய்யலாம்.

இவற்றை எல்லாம் கற்பிக்க ஆசிரியர் தங்களைத் தயார் செய்ய வேண்டும். ''நான் கற்பிக்கிறேன் - நீ கேள்'' என்ற மனப்பாங்கு மாறி, மாணவருடைய வாழ்வை, செயல்களை ஒழுங்கு பண்ணுவதில் ஈடுபட்டு, அவர்களை வளர்க்க வேண்டும், (Udbring the Child) எங்கள் கல்லூரியிலே இந்தக் கருத்துக்களை மனதில் கொண்டு வாழ்க்கைத் திறன், தொழில் நுட்பக் கல்வி சமுதாயக் கழகங்களின் செயற்பாடுகள், சமய வழிபாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.

## எமது கல்லூரியின் வளர்ச்சி: -

இப்பொழுது எங்கள் கல்லூரியின் வளர்ச்சி பற்றி நோக்குவோம். இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்க எடுத்துக் கொண்ட இக் காலப் பகுதியில், சில இக் கட்டான சூழ் நிலைகளில் நாங்கள் இயங்க வேண்டியிருந்தாலும் கல்லூரியின் வளர்ச்சி சற்றேனும் தடைப்படவில்லை என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன், 1985 க. பொ. த. சாதாரண பரீட்சையில் 45 மாணவர்கள் உயர்தர வகுப்பிற்குச் செல்லத் தகுதி பெற்றிருந்தார்கள். 1986 க. பொ. த. சாதரண பரீட்சையில் 82 மாணவர்கள் உயர்தரவகுப்பிற் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளார்கள். 1986 க. பொ. த. உயர்தர பரீட்சையில் 16 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள் இன்று வரையும் வெளியிடப்பட்டுள்ள வெட்டுப் புள்ளிகள் விபரப்படி செல்வன் தி. நாகேந்திரன் பொறியியல பீடத்துக்கு அனுமதி பெற வேண்டிய புள்ளிகளைப் பெற்றுள்ளார். வர்த்தகம், கலை பிரிவுகளுக்காகிய இப் புள்ளிகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

## விளையாட்டுத்துறை:-

சென்ற வருடம் எங்கள் இல்ல விளையாட்டுப் போட்டியில் கல்விப் பணிப்பாளர் திரு. R. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கல்வி அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P. சண்முகராசா கலந்து கொண்டார். மாணவர் பயிற்சிகளிலும் போட்டிகளிலும் மிகவும் ஆர்வம் காட்டினர்.

வழமை போல் இந்த வருடம் நடந்த வட்டார விளையாட்டுப் போட்டியிலும் இவ்வட்டாரத்தில் எங்கள் கல்லூரி மாணவரே அதிக இடங்களைத் தட்டிக் கொண்டார். 1985ல் நடந்த மாவட்டப் போட்டியில் 15 வயதுக்கு கீழ் 100மீற்றர், நீளப்பாய்தல், ஆகிய நிகழ்ச்சிகளில் R. சுபிதாவும், 15 வயதுக்குகீழ் பரிது வட்டம் எறிதல் நிகழ்ச்சியில் A. சுபிதாவும், 19 வயதுக்கு கீழ் உயரப்பாய்வதில் K. விஜயலட்சுமியும் இடம் பெற்றனர்.

இந்த வருடம் வட்டார நிலையில் நடந்த உடற்பயிற்சி போட்டிகளிலும் நாங்கள் அனுப்பிய மூன்று கோஷ்டிகளும் வெற்றியீட்டி உள்ளன. 19 வயதுக்குக் கீழ் பெண்கள் முதலாம் இடத்தையும், 17 வயதுக் கீழ் ஆண்கள் இரண்டாம் இடத்தையும், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

உதைபந்தாட்டத்தில் எல்லா வயது பிரிவுகளிலும் முன்னணியில் நாங்கள் நிற்பது குறிப்பிடத்தக்கது. 1985ல் 3ந் தவணை நடந்த 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் எங்கள் கல்லூரி ஸ்கந்தவரோயாக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரிகளாகிய வற்றுடன் போட்டியிட்டு வெற்றி பெற்று, இறுதியில் புனித ஜேம்ஸ் உடன் விளையாடிய பொழுது அந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்ததினால் நாங்கள் புனித ஜேம்ஸ் உடன் மாவட்ட இணைச்சம்பியன் ஆனோம்.

1986ம் ஆண்டு 2ம் தவணை நடந்த 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில், நாங்கள் மகாஜனக் கல்லூரியை 3 - 2 என்ற வகையிலும், யூனியன் கல்லூரியை 2 - 0 என்ற ரீதியிலும் கொக்குவில் இந்துக்கல்லூரியை 3 - 1 என்ற ரீதியிலும் வென்று, இறுதியில் புனித கென்றியார் கல்லூரியுடன் தோல்வி அடைந்தோம். 1986 13க்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மாவித்தியாலயத்தை 2-1 யூனியன் கல்லூரியை 2-0 கந்தரோடை கந்தையா வித்தியாலயத்தை 1 - 0 என்று வெற்றி பெற்று அரைவட்டப் போட்டியில் புனித ஜேம்ஸ் கல்லூரியிடம் தோல்வி அடைந்தோம். 17வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் ...டு இந்து, கலாநிதி தியாகராசா மத்திய மா. வி 4 - 0 அராலி இந்து, 3 - 0 என்ற ரீதியில் வென்று புனித என்றீஸ் கல்லூரியுடன் தோல்வியடைந்தோம். 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் நெல்லியடி ம. மா. வி. 1 - 0 என்ற ரீதியில் தோல்வி அடைந்ததினாலும் நொக் - அவுற் முறையைப் பின்பற்றி போட்டி நடந்ததினாலும் மேற்கொண்டு விளையாட முடியவில்லை.

பொருட்காட்சி :-

எங்கள் கல்லூரிப் பொருட் காட்சிக்கு எங்கள் பழைய மாணவரும் பிரதம கல்வி அதிகாரியுமாகிய திரு. தங்கராசா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள். விஞ்ஞானம், தொழில் நுட்பம், வாழ்க்கைத்திறன், வர்த்தகம், சமயம், இலக்கியம், சித்திரம் சங்கீதம் ஆகிய எல்லாத் துறைகளிலிலும் காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்கள் தரமானவை என்று மத்தியஸ்தர் குழு தீர்மானித்ததுடன் வட்டாரப் பொருகாட்சிக்கும் இப் பொருட்களில் பல தெரிவு செய்யப்பட்டன. பொருட்காட்சியைப் பெற்றோர், நலன்விரும்பிகள் பெரும் தொகையினராக வந்து பார்வையிட்டனர்.

எங்கள் கல்லூரியிலே வட்டாரப் பொருட்காட்சி நடாத்துவதற்கும் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீத, பண்ணிசை, சித்திரப் போட்டிகள்

யாழ் மாவட்டத்திலே நடந்த கர்நாடக சங்கீதப் போட்டியிலும், பண்ணிசைப் போட்டியிலும் மத்திய பிரிவில் முதலிடம் முறையே எங்களுக்கே. பண்ணிசைப் போட்டியில் S. கோபிநாத் M. புவியழகன், J. சுதாமாறன், S. துளசிதரன், K. கிருஷ்ணகுமார், இடம்பெற கர்நாடக இசைப் போட்டியில K வான்மதி, J. நாகபூசணி, P. இந்திரதாவி, M. சாந்தினி ஆகியோர் இடம் பெற்றனர்.

வட்டாரப் பொருட்காட்சியிலே சித்திரப் பிரிவிலே எங்கள் மாணவர் பலர் பாராட்டப் பட்டனர். யாழ் இந்துக் கல்லூரியிலே நடந்த மாவட்ட சித்திரப் பொருட்காட்சியிலே கீழ்க் காணும் மாணவருக்கு பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. 1. T. சிவநாதன், 2. S. செல்குமார் 3. M செந்தில்குமரன், 4. P. சிவகுமார், 5. N. கிருபானந்தன்.

## சமயத்துறை:

சமயத்துறையில் வழமைபோல இம்முறையும் நவராத்திரி விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. சரஸ்வதி பூசை அன்று நடைபெற்ற கலை, வில்லு நாடங்கள் நடனங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பூசைகள், அபிடேகங்கள் வெள்ளிக்கிழமை பிரார்த்தனை கூட்டங்கள் நாயன்மார் குருபூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன. சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. பல பழைய மாணவர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஆங்கிலதினம் இந்த வருடம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று இடம்பெற்ற நிகழ்ச்சிகள் தரமானவையாக அமைந்தன. எங்கள் உயர்தர மாணவமன்றம் ஒழுங்காக கூட்டங்கள் நடாத்துவதுடன் வருடாந்த மதியபோசன விருந்தையும் கலைவிழாவையும் சிறப்பாக நடாத்தியது. இந்த முறை மதிய போசன விருந்துக்கு எங்கள் பழைய மாணவரும் யாழ் கல்வித்திணைக்கள நிருவாக அதிகாரியுமாகிய திரு K. சந்திரராசாவும் அவரின் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

சமூகஇயற் கழகம் கலை, வர்த்தக பாடங்கள் சம்பந்தமான கருத்தரங்குகள் நடாத்துவதுடன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மண்டபத்தில் சிரமதான வேலைகளையும் மேற்கொண்டனர்.

எங்கள் லியோ கழகத்தினர் தொடர்ந்து பல சமூகசேவைகளில் ஈடுபட்டு எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்கள். மூளாய் வைத்தியசாலையில் ஒரு கட்டிடத்துக்கு வெள்ளையடித்து, இரத்ததானம் செய்தது. நாலாயிரம் ரூபாவும் அகதிகளுக்கு சேகரித்துக் கொடுத்தது ஆகியவை இங்கு குறிப்பிடவேண்டியவை. இவ்வருடம் அவர்களது பதவியேற்கும் வைபவம் வட்டுக்கோட்டை லயன்ஸ் பிரமுகர்களையும் மற்றைய கல்லூரிகளின் லியோக்களையும் அழைத்து விழாவாக நடாத்தப்பட்டது. அன்று Leovictora என்ற சஞ்சிகையையும் அவர்கள் வெளியிட்டார்கள். அண்மையில் போரூட் (FORUT) தாபனத்துடன் இணைந்து போதைவஸ்துக்களால் ஏற்படும் தீமைகள் என்னும் பொருள் பற்றி கருத்தரங்கு நடாத்தினார்கள். இதில் பேராசிரியர் N. சரவணபவானந்தன் பிரதம பேச்சாளராக பங்கு கொண்டார்.

சாரணர் இயக்கமும் வழிகாட்டிகளும் இந்தவருடம் புத்தூக்கம் பெற்று திறமையாக இயங்குகின்றனர். இரு சாராரும் சேர்ந்து ஒழுங்கு செய்த பேடன்பவல் தின நிகழ்ச்சிகள் எல்லோரினதும் பாராட்டை பெற்றுள்ளது.

## ஆசிரியர்கள்

இந்தக் காலப்பகுதியில் எங்கள் கல்லூரியிலே 15 ஆண்டுகளாக சேவை செய்த திருமதி P. A செல்வத்துரை அவர்கள் இளைப்பாறியுள்ளார். இவர் எங்கள் கல்லூரியில் சிறந்த ஆங்கில ஆசிரியராய் விளங்கியதுடன் வழிகாட்டிகளுக்கு பொறுப்பாய் இருந்தார். ஆங்கிலப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்செய்வதுடன் அவர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பையும் அவரே மேற்கொள்வார். யாழ் லயன்ஸ் கழகம், Y.M. C. A. வருடா வருடம் நடாத்தும் ஆங்கில நிகழ்ச்சிகளிலும் எங்கள் மாணவரை கலந்து கொள்ளச் செய்வார், கல்லூரியில் நடைபெறும் பல்வேறு வைபவங்களிலும் இரண்டறக் கலந்து ஈடு இணையற்ற சேவை புரிந்தவர் திருமதி P. A. செல்வத்துரை அவர்கள். சில வருடகாலமாக எங்கள் கல்லூரியில் நெசவு கற்பித்த திரு. S. சுப்பிரமணியம் அவர்களும் இக்காலப்பகுதியிலே ஓய்வு பெற்றார். இவரும் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுணர்ச்சி நிரம்பிய ஆசிரியர். இவர்கள் இருவரதும் இளைப்பாறிய வாழ்வு மகிழ்ச்சிகரமானதாக அமைய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

சிறந்த விஞ்ஞான ஆசிரியராக விளங்கிய திருமதி. T. நாகேந்திரன் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்துக்கும் தமிழில் சிறப்புப் பயிற்சி பெற்ற திருமதி. T. சிவநேசமும் சங்கானை சிவப்பிரகாச மாவித்தியாலயத்துக்கும் மாற்றலாகிச் சென்றுள்ளனர். இவர்கள் தங்கள் புதிய பாடசாலைகளில் சகல சிரும்பெற நாம் வாழ்த்துகிறோம்.

நடன ஆசிரியையாய் விளங்கிய செல்வி ஜெயந்தி ஆறுமுகம் நீண்ட லீவு பெற்று அவுஸ்ரேலியா சென்றுள்ளார்கள். வசதிக்கட்டண வேதனத்தில் சென்ற ஏழு வருடகாலமாக மனையியல் கற்பித்த செல்வி றஞ்சனி நல்லையாவும் திருமணமாகி சிசிலி (Secily) நாட்டுக்கு கணவனுடன் செல்ல ஆயத்தங்கள் செய்கிறார், இவர்கள் இருவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

இக்காலத்தில் எங்கள் கல்லூரிக்கு திரு. K. நாகரத்தினம், திரு. V. சண்முகநாதன் ஆகியோர் வந்துள்ளார்கள். இவர்கள் வருகை எங்களுக்கு மகிழ்ச்சியூட்டுகிறது.

புதிய எழுது வினைஞராக திரு. S. சிதம்பரநாதன் வந்துள்ளார். அவரது வேலைப்பழு கூடுதலாய் இருந்தாலும் சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் கவனிக்கிறார்.

## மாணவர் தலைவர்கள்

கல்லூரியைச் செவ்வனே நடாத்துவதற்கு மாணவர் தலைவர்கள் பெருமளவு உதவுகிறார்கள். செல்வன் க. சிவபாலன் தலைமையில் இயங்கும் மாணவர் தலைவர் குழாத்துக்கு எமது பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன

## கல்லூரி அபிவிருத்திச் சங்கம் :-

எங்கள் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் பாடசாலையின் அபிவிருத்தியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். புதிய ஆறும் வருட வகுப்பில் 135 மாணவர்களை சேர்த்துக் கொண்டதினால் ஏற்பட்ட தளபாட தட்டுப்பாட்டை இங்கு இருக்கும் உடைந்த தளபாடங்களை திருத்தி சமாளிக்க வேண்டிய பொருளுதவி வழங்கினார்கள். இன்னும் மாணவர்களே பல்வேறு விளையாட்டில் ஈடுபட வசதி செய்து கொடுக்கவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்குமுகமாகவும்ஒரு நிதிசேகரிக்க முன்வந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் முயற்சியிலே வெற்றி பெறுவார்களாக.

## நீத்தார் பெருமை :-

எங்கள் கல்லூரியிலே மாணவனாகவும், ஆசிரியனாகவும் 1974 தொடக்கம் 1977 வரையும் அதிபராகவும் இருந்த திரு V. இராசசுந்தரத்தை இக்காலப்பகுதியில் இழந்தோம் அவர் மரணச் செய்தி கேட்டதும், கல்லூரி முழுவதுமே அவர் இல்லத்துக்கு சென்று, அவரது மனைவியாருக்கு அனுதாபம் தெரிவித்து, இரங்கல் கூட்டமும் நடாத்திவிட்டு வந்தோம். அவர் அதிபராய் இருந்த காலத்திலேயே கல்லூரியில் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இன்றைக்கு எங்களுக்கு ஒரு சிறந்த விளையாட்டு மைதானம் இருப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்தது அவரே.

இன்றும் எங்கள் கல்லூரியிலே அதிபர் Small Wellagly காலத்தில் B Sc மாஸ்டர் என்று அழைக்கப்பட்ட பெரியார் சிதம்பரப்பிள்ளையும் சென்ற ஆண்டு சிவபதம் அடைந்தார். இவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரத்துக்கு உறுதுணையாய் இருந்ததுடன் சிலகாலம் அதிபராகவும் கடமையாற்றினார். சைவப்பெரியார் குருபூசை அன்று நடந்த இரங்கற் கூட்டத்தில் அவரது பழைய மாணவர்கள் உணர்ச்சியுடன் அவரது சேவையை நினைவு கூர்ந்தார்கள். இருவரது ஆன்மா சாந்தியடைவதாக..

## நன்றி

இந்தக் கல்லூரியை இறப்பட நடாத்துவதற்கு எல்லா வகையிலும் உதவி அளித்த துணை அதிபர், பிரிவுத்தலைவர்கள், எல்லா ஆசிரியர்களுக்கும் எழுது வினைஞர், மற்றைய ஊழியர்களுக்கும், கல்லூரி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டி ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கிய ஏனைய பெரியார்களுக்கும் வேண்டும் போதெல்லாம் யாம் வேண்டிய வசதிகளை உதவிப் பாடசாலை பரிபாலனத்துக்கு உதவி புரிந்த கல்வி அதிகாரிகளுக்கும் இத்தருணத்தில் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

— க. அருணாசலம் (அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகார்த்த பரிசுகள் வழங்கியவர்கள்

1. திரு சின்னப்பு இரத்தினகோபால்
2. திரு குழந்தைவேல் இரத்தினவடிவேல்
3. திரு ஸ்ரீ சண்முகசுந்தரம்
4. திரு ப. நவரத்தினம் குடும்பத்தினர்
5. டாக்டர் ஜே. ஆறுமுகம்

## கல்லூரிக் கீதம்

வாழ்க நிலமிசை வாழ்கவிக்ரோறியா
வாழிய வாழியவே
வான மளாவிய ஞானக் கலை கொண்டு
மாணவர் வாழ்ந்திடவே
சூழிருள் நீங்கிடவே கனகரத்தினம் ஏற்றிய
சோதிநீ வாழியவே
தூயநல் அறிஞர் செல்லப்பாச் செம்மல்
செய்பணி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் இன்கலை வீசி
எழில்பெற வாழியவே
எங்கள் கலைமாதா இன்பக் கலைச்செல்வி
என்றென்றும் வாழியவே
வாழ்க விக்ரோறியா வாழ்க விக்ரோறியா
வழிவழி வாழியவே
வாழ்வு விளைந்த தனைத்தும் அளித்து
வளர்க கலாலயமே.

பாலா அச்சகம், காரைநகர் போன்: 24